## முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருப்பூர்

**O.S. No. 45 /2021**

**வா.சா.1/T.R. Karthik/23.06.2023.**

**1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. 2.03.2017 அன்று டிரஸ்ட் ஓபி.46/2017 வழக்கு சொத்தை விற்பதற்கு அனுமதி கோரி கருணாநிதி என்பவர் மீது தாக்கல் செய்தேன் என்றால் சரிதான், அந்த சொத்து கரைப்புதூர் கிராமத்தில் உள்ளது. அந்த சொத்து 8 ஏக்கர். அவ்வாறு டிரஸ்ட் மனு தாக்கல் செய்வதற்கு முன்பு எங்கள் டிரஸ்டிஸ் கூட்டம் நடத்தப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்றால் சரிதான். அந்த மனு நானும் எனது தந்தையும் இந்த வழக்கில் 2ம் பிரதிவாதியான எனது சகோதரியும் சேர்த்து தான் அந்த டிரஸ்டு மனு தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். 05.09.2019 என்று அந்த மனு அனுமதிக்கப்பட்டது என்றால் சரிதான். அதன் பிறகு தான் இந்த வழக்கு சொத்து சம்மந்தப்பட்ட கிரையம் 28.12.2017 அன்று ஏற்பட்டது என்றால் சரிதான்.

2. வேறு டிரஸ்டு சொத்துக்கு டிரஸ்ட் ஓபி தாக்கல் செய்து அனுமதி பெற்று கிரையம் செய்திருக்கும் நிலையில் இந்த வழக்கு சொத்து சம்மந்தமாக ஏன் நீதிமன்றத்தில் அனுமதி வாங்கவில்லை என்றால் கிரையம் வாங்கும் நபர் நீதிமன்றத்தில் அனுமதி வேண்டும் என நிர்பந்தித்ததால் அந்த சொத்து கோரி அனுமதி வாங்கியிருந்தோம். இதில் பிரதிவாதி அவ்வாறு அனுமதி கோரவில்லை என்பதால் நீதிமன்றத்தில் மனு ஏதும் தாக்கல் செய்யவில்லை. அந்த சொத்து டிரஸ்ட் சொத்து என்பதால் அனுமதி கோரப்பட்டிருந்தது என்றும் இந்த சொத்து டிரஸ்ட் சொத்து இல்லை என்றும் தனிப்பட்ட சொத்து என்பதால் தான் அனுமதி கோரவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து விற்பனை செய்வதற்கு முனபு எங்கள் டிரஸ்டிஸ் மீட்டிங்கில் அது குறித்து பேசப்பட்டது. தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனால் இந்த அந்த தீர்மானம் வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை.

3. 20.12.2017 லிருந்து சொத்து விற்பனை செய்வதற்கு முன்புக்குள் தீர்மானம் நிறைவேற்றபபட்டிருக்கும். தீர்மானம் குறித்து எனது வழக்குரையிலும் பிரமாணவாக்குமூலத்திலும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தீர்மான நகலையும் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். டிரஸ்ட் சொத்து இல்லை

என்பதால் தான் தீர்மானமே நிறைவேற்றவில்லை என்றும் தீர்மான தேதியும் அவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாகவும் வழக்கில் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

4. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கும் டிரஸ்டிஸ் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதற்கு ஆவணம் எதுவும் வழக்கில் தா்ககல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். இது டிரஸ்ட் சொத்து இல்லை என்பதால் தான் அவ்வாறு தீர்மானம் நிறைவேற்றி வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி எனது சகோதரி. அவர் இந்த வழக்கை என்னுடன் சேர்ந்து தாக்கல் செய்வதற்கு சம்மதம் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. டிரஸ்டில் Resolution–ல் சம்மதம் தெரிவித்துள்ளார். அவர் வெளிநாட்டில் இருந்ததால் அவரை வாதியாக காட்ட இயலவில்லை. மேற்கண்ட விவரம் பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். சாட்சி தற்போது அவர் வெளிநாட்டிற்கு சென்றிருந்தாரா வெளியூருக்கு சென்றிருந்தாரா என்று தெரியாது என்று தெரிவிக்கிறார்.

5. வா.சா.ஆ.3 ஆவணம் 04.02.1985 –ல் கிரையம் ஏற்பட்ட ஆவணம். அது ரவி பெயரில் பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். தனிப்பட்ட முறையில் தான் ரவி வாங்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. டிரஸ்ட்டுக்காக வாங்கியதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். டிரஸ்டுக்காக மேற்கண்ட சொத்து வாங்கியிருந்தால் டிரஸ்ட் பெயர் இடம் பெற்றிருக்கும் என்றும் எனது தந்தை தனிப்பட்ட முறையில் வாங்கியதால் தான் அவர் பெயர் மட்டும் இடம்பெற்றிருக்கிறது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 பத்திர எண்.239/1985 தேதி 04.02.1985 தேதியிட்ட ஆவணம் 5 ஏக்கர் 34 1/4 செண்ட் உள்ள சொத்து. இதில் கிரையம் பெற்றவர் பார்க் டிரஸ்டுக்காக அதன் மேனேஜிங் டிரஸ்டி ரவி என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஒரே நாளில் அடுத்தடுத்த ஆவணமாக பதிவு செய்யப்பட்ட வா.சா.ஆ.3 மற்றும் 4–ல் இவ்வாறான வித்தியாசம் வருவதற்கான காரணம் என்ன என்றால் எனக்கு அது பற்றி தெரியாது.

5. வா.சா.ஆ.3 சொத்து தனிப்பட்ட முறையில் வாங்கியதால் எனது தந்தை பெயரில் தனிப்பட்ட முறையிலும் வா.சா.ஆ.4 சொத்து டிரஸ்டுக்காக வாங்கியதால் அது டிரஸ்ட் பெயருக்கும் கிரையம் ஏற்பட்டுள்ளது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. வா.சா.ஆ.4 ஆவணத்தில் செக்குப்பந்தியில் பிரேமாரவி கிரையம் பெறும் பூமிக்கு தெற்குபுறம் அமைந்துள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

பிரேமா ரவி எனது தாயார். வா.சா.ஆ.5 எனது தாயார் பிரேமா ரவி அதே தேதியான 04.02.1985 தேதியில் பத்திர எண்.240/1985 என்ற எண்ணில் க.ச.எண்.241/2 –ல் 6 ஏக்கர் 92 3/4 செண்ட் கிரையம் வாங்கியிருந்தார் என்றால் சரிதான். இந்த சொத்தை தான் முந்தைய ஆவணமான வா.சா.ஆ.4–ல் எனது தாயார் கிரையம் வாங்கிய சொத்திற்கு தெற்கு என நான்கெல்லை குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ஆவணத்தில் திருப்பூர் டவுன், கேபிஎன் காலனி, கதவு எண்.21 –ல் குடியிருக்கும் பி.வி.ரவி அவர்களின் மனைவி பிரேமா எனக் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான. பார்க் டிரஸ்டுக்காக பிரேமா ரவி என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பார்க் டிரஸ்டுக்காக வாங்கியதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

6. வழக்கு வா.சா.ஆ.5 ஆவணம் டிரஸ்டுக்காக வாங்கிய சொத்து என குறிப்பிடப்பட்டுள்ளது. எதன் அடிப்படையில் குறிப்பிடுகிறேன் என்றால் டிரஸ்டுக்காக மேற்க்ணட சொத்து பயன்படுத்தி வந்ததால் அது டிரஸ்டு சொத்து என குறிப்பிடுகிறேன். டிரஸ்டின் பேரில் சொத்து கிரையம் பெறாத பட்சத்தில் அது டிரஸ்ட் சொத்து என குறிப்பிடுவது தவறு என்றால் சரியல்ல.

**<u>நீதிமன்ற கேள்வி</u>**.

வா.சா.ஆ.5 ஆவணத்தில் கண்டுள்ள சொத்திற்கு வருடாவருடம் சொத்து வரி பார்க் டிரஸ்ட்டுதான் செலுத்தி வருகிறார்கள். 1985 லிருந்து இன்றைய தேதி வரை பிரேமாரவி பெயரில் சொத்து வரி ரசீது வரி வழங்கவில்லை. பார்க் டிரஸ்ட் பெயரில் தான் வழங்கப்பட்டுள்ளது. இந்த சொத்து குறித்த வரி குறித்து நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துளளேன்.

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

7. பார்க் டிரஸ்ட் பெயரில் ஒருநாளும் வா.சா.ஆ.5 ஆவணத்தில் கண்டுள்ள சொத்திற்கு வரி செலுத்தியதில்லை என்றும் எனது தாயார் பெயரில் தான் வரி செலுத்தப்பட்டு வருகிறது என்றும் வழக்கிற்காக டிரஸ்ட் பெயரில் செலுத்தி வருகிறோம் என்று பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் **13.05.1991 தேதியிட்ட பத்திர எண்.1493/1991 ஆவணத்தில் கிரையம் பெறுபவர் பார்க் டிரஸட் மேனேஜிங் டிரஸ்டி பிவி ரவி என்றும் கிரையம் கொடுப்பவர் பிரேமாரவி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது பி.வா.சா.ஆ.2.** மேற்கண்ட ஆவணத்தில் எனது தாயார் தனக்கு சுயார்ஜிதமாக கிரைய

வகையில் பாத்தியப்பட்ட சொத்து என்று பத்திர எண்.240/1985 கிடைத்ததில் 1 பகுதி 2 ஏக்கர் விற்பதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். விற்றதுபோக மீதி என் தாயார் பெயரில் இருப்பது 4 ஏக்கர் 92 3/4 செண்ட் என்றால் சரிதான். அந்த மீதி சொத்தை தான் எனது தாயார் இறந்தபிறகு வா.சா.ஆ.16 மூலம் முதல் பிரதிவாதிக்கு கிரையம் தரப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

8. மேற்கண்ட கிரையப்பத்திரத்தில் எனது தந்தையின் மனைவி மற்றும் எங்களது தாயாரான பிரேமாரவி என்பவருக்கு 04.02.1985 அன்று எழுதிக்கொடுக்கப்பட்டு அது திருப்பூர் மாவட்டம் பதிவளார் அலுவலகத்தில் 240/1985 என்று பதிவான கிரையப்பத்திரப்படி சுயார்ஜிதமாக பாத்தியப்பட்டு மேற்படியார் அனுபவித்து வந்து மேற்படியார் 14.10.2017 ல் காலமான பின்பு திருப்பூர் வட்டாட்சியரால் வழங்கப்பட்ட வாரிசு சான்றிதழ் படி எங்கள் அனைவருக்கும் பாத்தியப்பட்டு அதுமுதல் நாங்கள் சர்வ சுதந்திரமாய் அனுபவித்து வரும் சொத்து என சொல்லியுள்ளோம் என்றால் சரிதான். ஆவணம் முதல் பிரதிவாதியால் தயாரித்தது என்பதால் அவர் சொன்ன விவரங்கள். ஆனால் நாங்கள் அதில் கையெழுத்திட்டுள்ளோம். மேற்கண்ட ஆவணத்தை நாங்கள் தான் தயாரித்தோம் என்றும் நன்கு படித்த நாங்கள் ஆவணத்தில் உள்ள விவரங்கள் தெரிந்து தான் கையெழுத்திட்டுள்ளோம் என்றால் சரிதான். விற்பதற்காக மேற்கண்ட ஆவணம் ஏற்படுத்தவில்லை.

9. மேற்கண்ட பத்திரத்தில் கிரையமும் சுவாதீனமும் கொடுக்கப்பட்டுள்ளதாக கண்டுள்ளது என்றால் சரிதான்.

<u>நீதிமன்ற கேள்வி</u>

எங்கள் தாயார் பெயரில் இருந்த தாவா சொத்திற்கான மூலப்பத்திரம் முதல் பிரதிவாதி வசம் அன்றைய தினம் ஒப்படைத்துள்ளோம்.

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

மூலப்பத்திரம் ஒப்படைத்த விவரத்தையும் மேற்கண்ட கிரையப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளோம். அதற்கு முந்தைய அசல் ஆவணங்களையும் ஒப்படைத்திருப்பதாக சொல்லியுள்ளோம் என்றால் சரிதான். வா.சா.ஆ.16 ஆவணத்தில் ஏதேனும் ஒரு இடத்தில் டிரஸ்ட் சொத்து என குறிப்பிட்டுள்ளோமா என்றால் குறிப்பிடவில்லை. சார்பதிவாளர் கொடுத்த அறிவுறுத்தலின் பேரில் அவ்வாறு குறிப்பிடவில்லை.

சார்பதிவாளர் அவ்வாறு ஏன் சொன்னார் என்று எனக்கு தெரியாது. எங்களுக்கு எவ்வித உரிமையும் கிரையத்தின் பிறகு கிடையாது என்று ஆவணத்தில் சொல்லியுள்ளோம் என்றால் சரிதான். வா.சா.ஆ.16 ஆவணத்தில் நான்கெல்லைகள் பார்க் டிரஸ்ட் பூமிகள் கிழக்கு மற்றும் வடக்கு எனக் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த சொத்துக்கள் 2ம் பார்க் டிரஸ்ட் பெயரில் வாங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நாங்கள் கியைம் கொடுத்த சொத்திலும் எது டிரஸ்ட் பூமி என தெளிவாக சுட்டிக்காட்டியுள்ளோம் என்றும் எது தனிப்பட்ட பூமி என சுட்டிக்காட்டியுள்ளோம் என்றும் மேற்கண்ட விவரங்கள் நன்கு தெரிந்தே ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

<u>நீதிமன்ற கேள்வி</u>

10. வா.சா.ஆ.16 ஆவணத்தில் நாங்கள் திரும்பி வாங்கிக்கொள்வதாக எவ்வித உடன்படிக்கையும் இல்லை என்றால் சரிதான். இது இல்லாமல் வேறு தனிப்பட்ட முறையில் எவ்வித ஒப்பந்தமும் எங்களுக்கும் முதல் பிரதிவாதிக்கும் இடையில் இல்லை என்றால் சரிதான். வாய்மொழியாக எங்களுக்கிடையே ஒப்பந்தம் உள்ளது. 2 ஆண்டுகளுக்குள் முழு தொகையையும் 8 சதவீத வட்டியுடன் செலுத்திவிடுவதாகவும் அவ்வாறு செலுத்தினால் திரும்பி எழுதிக்கொடுப்பதாக ஒப்புக்கொண்டிருந்தார்கள். சுப்பிரமணியம் என்பவர் முன்னிலையில்தான் இந்த ஒப்பந்தம் முடிவு செய்யப்பட்டது. அன்றைய தேதியில் மனோகரன் இல்லை. பத்திரம் பதிவு செய்யும் போது மனோகரன் அதை உறுதி செய்தார். மேற்கண்ட விவரத்தை பிராதில் குறிப்பிட்டுள்ளேன்.

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

11. நான் சொல்வது போல் வாய்மொழி ஒப்பந்தம் ஏற்படுத்தவில்லை என்றும் மனோகரன் ஒப்புக்கொள்ளவில்லை என்றும் வழக்கிற்காக நான் கற்பனையாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் கூறுவது உண்மையாக இருந்திருந்தால் கிரைய ஆவணம் ஏற்படுத்திய அன்றே மறு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தியிருப்போம் என்றால் சரியல்ல. அவ்வாறு எந்த ஒப்பந்தமும் ஏற்படாததால் தான் மறு கிரைய உடன்படிக்கை ஏற்படுத்தவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து எனது தயாரின் தனிப்பட்ட சொத்து என்றும் அது எப்போதும் டிரஸ்ட் சொத்து இல்லை என்றால் சரியல்ல. எனது தாயார் கிரையம் கொடுத்த 2 ஏக்கர் சொத்து போக மீதியுள்ள தாவா சொத்தான 4 ஏக்கர் 92 3/4 செண்ட் அவர் வாழ்நாளில் டிரஸ்டுக்கு ஆவணம் மூலம்

கொடுத்துள்ளாரா என்றால் இல்லை. அதனால் எனது தாயார் டிரஸ்டுக்கு கொடுக்காத பட்சத்தில் தாவா சொத்து டிரஸ்ட் சொத்து என கூறுவது ஏற்புடையதல்ல என்றும் டரஸ்ட் சொத்து என பொய்யாக குறிப்பிடுகிறோம் என்றால் சரியல்ல.

12. தாவா தாக்கல் செய்த போது சுமார் 500 குழந்தைகள் படித்து வந்தார்கள். அது சம்மந்தப்பட்ட ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கிற்காக 500 குழந்தைகள் இருந்ததாக பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றும் 500 குழந்தைகள் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து அமைந்துள்ள 4.92 3/4 ஏக்கரில் பள்ளி தொடர்புடைய பள்ளி கட்டிடமோ, நூலகமோ, அலுவலக கட்டிடமோ எதுவும் இல்லை என்றால் சரியல்ல. அலுவலக கட்டிடம் மற்றும் விளையாட்டு மைதானம், ஊழியர்கள் தங்கும் விடுதி, மாணவர் விடுதி, நீச்சல் குளம் மற்றும் மாட்டுப்பண்ணை அமைந்துள்ளது. தாவா சொத்தில் தென்மேற்கு மூலையில் பள்ளியின் அலுவலக கட்டிடம் சுமார் 1000 சதுரடியில் அமைந்துள்ளது. அங்கு பெற்றோர்கள் மற்றும் குழந்தைகள் சந்திக்கும் இடம். பீஸ் கலெக்சன் செய்யும் இடம். தாவாவிலும் வழக்கு சொத்து விவரத்திலும் பள்ள அலுவலக கட்டிடம் தாவா சொத்தில் அமைந்திருப்பதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் கூறுவது போல் பள்ளி அலுவலகக்கட்டிடம் தாவா சொத்தில் இல்லை என்றும் அதனால் தான் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

13. தாவா சொத்தில் தென்கிழக்கில் அரை ஏக்கரில் 7 குடும்பங்களும், 20 முதல் 30 பெண்களும் தங்குவதற்கு ஏற்றவாறு கட்டுமானம் உள்ளது. அது சிதைந்து பழைய கட்டிடம் உபயோகமில்லாமல் உள்ளது என்றால் அது பராமரிப்பு செய்யவேண்டிய நிலையில் உள்ளது . ஆனால் தற்சமயம் இன்னும் ஊழியர்கள் தங்கியுள்ளார்கள். பராமரிக்க எங்களை விடமாட்டிகிறார்கள். மனோகரன் விடாமாட்டிகிறார். பிரதிவாதி மனோகரன் அனுபவத்தில் இருப்பது உறுதியாவதால்தான் அவர் விடமாட்டிகிறார் என்று குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல. நீச்சல் குளம் மற்றும் விளையாட்டு மைதானம் உபயோகத்தில் இல்லை என்றும் வழக்கிற்காக அதை பொய்யாக குறிப்பிடுகிறனே் என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையரிடம் அந்த விவரத்தை தான் அறிக்கையில் தெரிவித்திருந்தார் என்றால் கோவிட் காலம் என்பதால் பராமரிப்பின்றி இருந்தது. மேற்கண்ட விவரத்தை பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

14. தாவா சொத்து குறித்த அடங்கல் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்திற்கு நேர் மேல்புறம் பார்க் கல்லூரி அமைந்துள்ளது என்றால் சரிதான். அதற்கு தனி கேட் மற்றும் வாயில் உள்ளது என்றால் சரிதான். அதற்கு பின்னால் பார்க் ஸ்கூல் உள்ளது என்றால் சரிதான். அதற்கு நேர் தென்புறம் ஒரு கேட் உள்ளது ஒரு வழி உள்ளது என்றால் சரிதான். அது லேஅவுட் கிரவுண்டிற்கு செல்கிறது என்றால் சரிதான். எங்கள் பள்ளிக்கு செல்வதற்கு தாவா சொத்து மட்டும் தான் வழி என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. தென்புறம் அமைந்திருப்பதாக சொல்லும் வழி தனிநபர் சொத்து வழி அது அவரச காலத்திற்கு பயன்படுத்துவதற்ககாக வைத்துள்ளோம். அது தனிநபர் சாலை இல்லை என்றும் அது தார்ரோடு பொதுவழி என்றால் சரியல்ல. அந்த வழியாக நிறைய வீடுகள் மற்றும் பள்ளிக்கு செல்ல முடியும் என்றால் சரிதான். அந்த ரோடு அரசாங்கத்தால் போடப்பட்ட பொதுவழி என்றும் அதை உபயோகப்படுத்துவதற்காகத்தான் கேட்டே நாங்கள் வைத்தள்ளோம் என்றால் சரியல்ல. முதல்முறையாக தற்போது தான் அது Emergency ரோடு என்று பிராதில் சொல்லாத விவரத்தை சொல்கிறனே் என்றால் சரியல்ல.

15. தாவா சொத்திற்கு தென்புறம் கேட் உள்ளது. அதற்கு வடபுறம் தான் பார்க் பள்ளி உள்ளது என்றால் சரிதான். எனவே தாவா சொத்து தனித்து அமைந்துள்ளது என்றும் அது பள்ளி வளாகத்துடன் சேர்ந்து அமையவில்லை என்றால் சரியல்ல. பெற்றோர்கள் உள்ளே வரக்கூடாது என்பதற்காக அந்த கேட் பள்ளி மாணவர்களின் பாதுகாப்பிற்காக நாங்கள் அமைத்துள்ளோம்.

16. வா.சா.ஆ.16 ஆவணத்தில் தாவா சொததில் அமைந்துள்ள கிணறு, கிணற்றிற்குரிய மின் இணைப்பு 220, 300 பூமிக்குரிய மாமூல் தடபாத்தியம் கிரையம் கொடுத்துள்ளோம் என்றால் ஆவணத்தில் அவ்வாறு தான் குறிப்பிடப்பட்டுள்ளது. பூமியுடன் கிணறு மற்றும் மின் இணைப்பு கிரையம் கொடுத்து விட்டு அதில் உரிமை கொண்டாட முடியாது என்றால் சரியல்ல. கிணறு மற்றும் மின் இணைப்பு முதல் பிரதிவாதிக்கு சுவாதீனம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.8 ஆவணம் Googly Map 2007 லிருந்து இருப்பதை தாக்கல் செய்துள்ளோம். 2007 லிருந்து இன்றைய தேதி வரை தாவா சொத்து Ground ஆக இருப்பதை காண்பிக்க தாக்கல் செய்துள்ளோம். மேற்கண்ட ஆவணத்தில் தாலுக்கா பெயரோ, தெரு பெயரோ, க.ச. எண்ணோ, ஊர் பெயரோ, வீதி பெயரோ இல்லை என்றால் சரிதான். மேற்கண்ட

ஆவணத்தை எனது அலுவலக ஊழியர் யாரோ எடுத்திருக்கிறார். தாவா சொத்து தான் இது என்பதை அடையாளப்படுத்துவதற்கு குறிப்பு எதுவோ மேற்கண்ட ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் பார்க் காலேஜ் என எழுதப்பட்டுள்ளது. எது பார்க் காலேஜிற்கான இடம் , எது பார்க் பள்ளிக்கான இடம் என அடையாமிட்டு காட்டவில்லை என்றால் சரிதான். மேற்கண்ட ஆவணத்தில் அடிப்படையில் வழக்கு சொத்தை கண்டறிய முடியாது என்றும் அது வழக்கு சொத்திற்கு சம்மந்தமில்லாத ஆவணம் என்றும் ஏதோ ஒரு காரணத்திற்காக வழக்கில் போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

17. நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட புகைப்படங்கள் எப்போது எங்கு எடுக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. மேற்கண்ட ஆவணத்திற்கும் வழக்கு சொத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. பிராது 10 பத்தியல் குறிப்பிடப்பட்டுள்ள சர்வேயர் அறிக்கையயை வழக்கில் தாக்கல்செய்யவில்லை என்றால் சரிதான். அது தனியார் சர்வேயர். அவ்வாறு சர்வே செய்ததாக சொல்லப்படும் போது பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பவிலலை என்றாலர் சரிதான். அவ்வாறு சர்வே செய்யவில்லை என்றும் பிரதிவாதி சுவாதீனத்தில் இருந்த சொத்தை நாங்கள் சர்வே செய்ததாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. சர்வே செய்ததாக சொல்லும் தேதிக்கு சுமார் 2 வருடங்களுக்கு முன்பாகவே முதல் பிரதிவாதி கிரையம் பெற்று அனுபவித்தில் இருந்து வருகிறார் என்றால் சரியல்ல. அரசாங்க சர்வேயர் மூலம் பிரதிவாதி சுவாதீனத்தில் இருக்கும் சொத்தை சர்வே செய்ய முடியாது என்பதால் தான் சர்வே செய்யாமல் தனியார் மூலம் சர்வே செய்ததாக பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல.

18. வா.சா.ஆ.11 லோன் ஒப்பந்தம் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த ஒப்பந்தத்தை ஆஜர் செய்தால் எந்த காரணத்திற்காக யாருக்காக கடன் வாங்கப்பட்டது என்ற விவரம் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரிதான். வா.சா.ஆ.12 ஆவணம் அடமானப் பத்திரம் பார்க் டிரஸ்டின் பேரில் கிரையம் பெற்ற 5 ஏக்கர் 34 செண்ட் சொத்து அடமானம் வைத்து 5 கோடி ரூபாய் கடன் வாங்கப்பட்டது என்றால் சரிதான். பார்க் டிரஸ்ட் சொத்து தான் அடமானம் வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அடமானப்பத்திரம் தேதி 17.02.2016 இது முதல் பிரதிவாதிக்கு பெயருக்கு ஏற்படுத்திக்கொடுத்த கிரையத்திற்கு முன்னிட்டது என்றால் சரிதான். அதிலும் பிரேமாரவி கிரையம் வாங்கிய சொத்திற்கு தென்புறம் என காண்பிக்கப்பட்டுள்ளது

என்றால் சரிதான். அது தான் தாவா சொத்து என்றால் சரிதான். அதில் டிரஸட் சொத்து என்று காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான்.

19. மேற்கண்ட அடமானப்பத்திரத்தில் தாவா சொத்து எனது தாயாரின் தனிப்பட்ட சொத்து என செக்குப்பந்தியில் ஒப்புக்கொண்டு குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் தற்போது வழக்கிற்காக தாவா சொத்து டிரஸட் சொத்து என பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல. டிரஸ்ட் சொத்து என குறிப்பிடவில்லை என்றால் சரிதான். டிரஸ்ட் சொத்து இல்லை என்பதால் தான் அவ்வாறு குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. கடன்கொடுத்தவர் மேற்கண்ட ஆவணத்தை தயாரித்து எடுத்து வந்ததால் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. மூல ஆவணம் 1985 லிருந்து 2016 வரை தாவா சொத்து பிரேமரவிக்கு தனிபட்ட சொத்தாக தொடர்ச்சியாக இரந்து வந்ததால்தான் தாவா சொத்து பிரேமரவியின் தனிப்பட்ட சொத்தாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. உண்மையிலேயே டிரஸ்ட் சொத்தாக தாவா சொத்து இருந்திருந்தல் தொடர்ச்சியா 1985 லிருந்து டிரஸட் சொத்தாக குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.12 கடனுக்காக வாங்கப்பட்ட ஆவணம். கடனுக்காக அடமானபத்திரம் பதிவு செய்து கடன் வாங்கும் வழக்கம் எங்களுக்கு இருந்துள்ளது என்பதால் தான் அவ்வாறான ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்த கடன் கொடுத்தவர் அடமானக் கடன் பத்திரம் போதும் என்று சொன்னதால் அவ்வாறு எழுதிக்கொடுத்தோம். பிரதிவாதி கிரையம் எழுதி தர வேண்டும் எனக்கேட்டதால் அவ்வாறு எழுதிக்கொடுத்தோம். நான் கூறுவது பொய் என்றும் உண்மையான கிரையப்பத்திரம் என்பதால் தான் கிரையம்பத்திரம் எழுதிக்கொடுத்தோம் என்றால் சரியல்ல. பிரதிவாதியுடன் வட்டித்தொகை பேசியது தொடர்பாக ஏதேனும் ஆவணம் எங்கள் வசம் உள்ளதா என்றால் ஆவணம் இல்லை. வட்டிக்கே பேச வில்லை என்பதால் தான் அவ்வாறு ஆவணம் ஏதும் இல்லை என்றால் சரியல்ல.

20. எங்கள் கூற்றுப்படி மாதமாதம் வட்டி செலுத்துவதாக எங்களுக்கிடையில் ஒப்பந்தம் ஏதும் இல்லை. நான் கூறுவது பொய் என்றும் வட்டிக்கான வரவு செலவு இல்லை என்பதால் தான் அவ்வாறு ஒப்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. 2 வருட காலகட்டத்திற்குள் வட்டி மற்றும் அசல் தர தயாராக உள்ளோம் என்றும் மீண்டும் கிரையம் எழுதித்தர கேட்டு அறிவிப்பு அனுப்பினோமா என்றால் இல்லை. அவ்வாறு

ஒப்பந்தம் எதுவும் இல்லாததால்தான் அவ்வாறு அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரியல்ல.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

சாட்சியின் வாக்குமூலம் என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

SWARNAM J NATARAJAN
Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2023.06.23 18:18:30 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருப்பூர்.